# DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 79/2021 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for | : | Prosecution P.W.4 |
| | | Defence |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கோபாலகிருஷ்ணன் | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | | ஜாதி | : | |
| கிராமம் | : | | இனம் | : | |
| தாலூக்கா | : | | வயது | : | |
| Mail ID | : | | Mobile No. | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 20.11.2024

முதல் விசாரணை

1. நான் தற்போது சென்னை வண்டலூர் வன உயிரின உயர் நிலை வன பாதுகாப்பு நிறுவனத்தல் வனவராக இருந்து வருகிறேன் இதற்க முன்பு நான் கரட்டுர் பிரிவு வன சரகத்தில் வனவராக பணியில் இருந்த போது கடந்த 29.08.2021 ம் தேதி காலை 8.30 மணிக்கு வனக்காப்பாளர் ஞானசேகரன் என்பவர் எனக்கு போன் மூலமாக கரட்டுர் பீட்டில் 35 வயதுள்ள ஆண் காட்டு யானை தந்தம் இல்லாமல் இறந்து கிடப்பதாக தகவல் கிடைத்து நான் சென்று அங்கு பார்த்து அதன் பின்னர் வனச்சரக அலுவலருக்கு தகவர் கூறினேன். . பின்னர் வன ச்சரக அலுவலர் அங்கு வந்து விட்டார். யானை இறந்து கிடந்த இடம் தூரம் என்பதாலும் மாலை நேரத்தல் திரேக பரிசோதனை மேற்கொள்ள கூடாது என்றும் மறுநாள் காலை 11.00 மணிக்கு பிரேத பரிசோதனை செய்யப்பட்டது. யானைக்கு பிரேத பரிசோதனை மருத்துவர் சுகுமாறன் மற்றும் அரவிந்து ஆகியோர் மேற்கொண்டனர். அந்த சமயத்தில் நானும் மாவட்ட வன அலுவலர் மற்றும் உதவி வன பாதுகாவலர் ஆகியோர் சென்றோம்.

2. யானை வலது பக்கம் சாய்ந்து படுத்து கிடந்தது. இடது புறம் யானையின் தந்தம் வெட்டப்பட்டுருந்தது. அந்த யானை ஒற்றை கொம்பு யானை என்றும அந்த பகுதியில் உலா வந்தது என்றும் அந்த பகுதி மக்கள் பார்த்திருந்தனர், மற்றொரு தந்தம் உடலின் உட்பகுதியில் இருந்தது. தந்தத்தின் நீளம் 37 cm மற்றும் சுற்றளவு 34 cm ஆகும். பால்ரஸ் குண்டு –2 காலின் பகுதியில் இருந்தது. ஒரு குண்டு உடலில் மூடப்பட்டுளள நிலையில் காதோரத்தில் இருந்தது . மருத்துவர் இந்த குண்டுகளால் உயிரிழப்பு ஏற்பட இலலை என்று கூறினார். இதயம் நுரையீரல் குடல் ஆகியவற்றை தனித்தனியாக எடுத்து ஆய்வறிக்கைக்கு நீதிமன்றம் அனுமதியுடன் அனுப்பி வைத்தேன். ஆய்விற்காக தமிழ்நாடு வனஉயிரின மேலாண்மை சென்னை, கால்நடை மருத்துவ கல்லுாரி, கோவை அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டது. தனிப்படை அமைத்து இறந்து நாளிலிருந்து ஒற்றை தந்தம் குறித்து விசாரிக்க உதவி இயக்குநர் அவர்கள் தனிக்குழுவை அமைக்க உத்தரவிட்டார். 30.08.2021 ம் தேதியன்று நான் இறந்து போன யானை பரிசோதனை செய்த இடத்தில் ஸ்தல மகசரும் ஸ்தல வரைபடமும் தயார் செய்து உடுமலை துணை இயக்குறரின் உத்தரவின் படி தயார் செய்து அங்கிருந்து தனிக்குழுவினரின் சாட்சி கையொப்பம் பெற்றேன் . ஸ்தல மகசர் அசா.ஆ.**3** ஸ்தல வரைபடம் அசா.ஆ.**4** என்றும் குறியீடு செய்யப்படுகிறது. அதில் உதவி வன பாதுகாலவர் கணேஷ்ராம் அவர்கள் வனச்சரக அலுவலர் தனபால் தலைமையில நானும் வனப்பணியாளர் ஞானசேகரன் வனவர் தங்கபிரகாஷ் ஆகியோர் இருந்தோம்.

3. 02.09. 2021 ம் தேதி மாலை 5.00 மணிக்கு கரட்டுர் பிரிவு உடைந்த பாலம் அருகில் வெள்ளை நிற உர சாக்கு பை மற்றும் மஞ்சள் நிற உர சாக்கு பை எதிர் எதிர் திசையில் கல்லுக்கு இடையில் வைத்திருந்தார்கள். அதை எடுத்து பார்த்த போது ஒற்றை தந்தம் இருந்தது. அதன் சுற்றளவைகளை அளந்து பார்த்த போது இறந்த ஆண்யானையின் ஒற்றை தந்தத்துடன் ஒத்திருந்தது. அன்றைய தினம் கைப்பற்றப்பட் இடத்தில் ஸ்தல மகசர் ஸ்தல வரைபடம் என் மூலமும், தயார் செய்யப்பட்டு தனிக்குழுவின் கையொப்பம் பெற்றேன். அந்த ஸ்தல மகசர் அசா.ஆ.**5** ஸ்தல வரைபடம் அசா.ஆ.**6** என்றும் குறியீடு செய்யப்படுகிறது. H நமுனா ஞான சேகரன் வனக்காப்பாளர் தயார் செய்தார்.

4. பின்னர் தனிக்குழு கரட்டுர் 22.09.2021 ம் தேதி எதிரிகளை தேடி கண்டுபிடிக்க நடவடிக்கை மேற்கொண்ட போது மாலை 5.00 மணியளவில் நல்லாறு பகுதியில் கல்லின் மேல் 4 நபர்கள் உட்கார்ந்திருந்தனர். எங்களை பார்த்ததும் 2 பேர் ஓடினார். 2 பேர்

பிடிப்பட்டனர். சின்னதங்கம் மற்றும் வேலு பிடிப்பட்டனர். அவர்களை விசாரணை செய்த போது யாணை தந்தத்தை வெட்டி எடுத்த குற்றத்தை ஒப்புக் கொண்டனர். அன்றைய தினம் கைப்பற்றப்பட் இடத்தில் ஸ்தல மகசர் ஸ்தல வரைபடம் என் மூலம் தயார் செய்யப்பட்டு தனிக்குழுவின் கையொப்பம் பெற்றேன். அந்த ஸ்தல மகசர் அசா.ஆ.7 ஸ்தல வரைபடம் அசா.ஆ.8 என்றும் குறியீடு செய்யப்படுகிறது. மேலம் 3 நாட்களுக்கு பிறகு இறந்து கிடந்த யாணையின் தந்தத்தை வெள்ளளைசாமி கோடாரியால் வெட்டினார் என்றும், திருமண் என்பவர் அறுவாளால் வெட்டினார் என்றும நாங்கள் இருவரும் வெட்டும் பொழுது யாராவது வருகிறார்களா என்று பார்த்ததை ஒப்புகொண்டனர். சின்னதங்கத்திடம் தங்கபிரகாஷ் வனவரும், தனபால் என்பவர் வேலு என்பவரிடம் ஒப்புதல் வாக்குமூலம் தனித்தனியாக பெற்றார்கள். அந்த தந்தத்தை வெட்டி வியாபாரம் செய்யும் நோக்கில் எடுத்ததாக கூறினார்கள். பின்னர் அந்த தந்தத்தை உடைந்த பாலம் பகுதியில கல்லுக்கு அடியில் வெள்ளை மற்றும் மஞ்சள் நிற சாக்கு பையில் மறைத்து வைத்திருந்ததாக கூறினார். தப்பி ஓடிய நபர்கள் பிடித்து விசாரித்த போது அவர்களின் பெயர்கள் வெள்ளை சாமி திருமன் என்று கூறினார்கள். அதன் பிறகு மேல் நடவடிக்காக வனச்சரகத்திற்கு கொண்டு வந்தோம். வனச்சரகர்கள் மேல்நடவடிக்கை மேற்கொண்டனர்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. இந்த வழக்கு சம்பந்தமாக உங்களை யாரும் விசாரிக்கவில்லை என்றால் வனச்சரக அலுவலர் விசாரித்தார். நீங்கள் ஒப்புதல் வாக்குமூலத்தில் தனிக்குழுவில் எதிரிகளை பிடித்த போது அவர்ள சொன்னதை அப்படியே பதிவு செய்து அதில் சாட்சி கையெழுத்து போட்டுள்ளேன் என்றல்சரிதான். 29.08.ல் இருந்து சுமார் ஒரு மாத காலமாக எதிரிகள் உங்கள் கண்ணுக்கு தென்பட வில்லையா என்றால் சரிதான். வழக்கிற்காக பொய்யாக கூறிகிறிர்கள் என்றால் சரியல்ல. லட்சுமிபதி எவ்வளவு காலமாக பணியில் இருந்து வருகிறார் என்றால் வனத்துறை பணியாளர் இல்லை, பொதுமக்களின்.

2. நீங்கள் எங்கு வைத்து ஒப்புதல் வாக்குமூலம் தயாரிக்கப்பட்டது எனறு சொல்லியுள்ளிர்களா என்றால் நல்லாறு வனப்பகுதியில் ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டது இந்த வழக்கிற்காக 2 ஒப்புதல் வாக்குமூலத்தில் அவர்கள் சொன்னதை போல் பதிவு செய்ய வேண்டும் என்பது தெரியும் என்றால் சரிதான். வனக்குற்ற எண் தேதி போன்ற விவரம் அவர்களுக்கு சொல்ல தெரியாது என்ற விவரம் தெரியும் என்றல் தேதி தெரியும் வனக்குற்ற எண் தெரியாது. சடையன்பாறை வஞ்சி மகன் கஞ்சிமலையான் பீன்ஸ் பயிரிட்டு வருகிறார்கள் என்றால் சரிதான். அவர்களை இந்த வழக்கில் சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால்

விசாரித்தோம் சாட்சியாக போடவில்லை.
3. யானை இறந்து எவ்வளவு நாள் கழித்து மருத்துவர் வந்தர்கள் என்றால் மருத்வர்க பரிசோதித்த யானை 4 நாட்கள் முன்பு இறந்ததாக சொன்னார்கள். ஸ்தல வரைபடத்தில் நிங்கள் காட்டியுள்ளது போது வழியமைப்புகள் இல்லை என்றால் வரைபடத்தில் காட்டியது போல் நேராக இல்லை, மலைப்பாதையில் பாதை நேராக இருக்காது, வளைந்து நெளிந்து தான் இருக்கும், ஸ்தல மகசர் என்ன குறிப்பிட வேண்டும் என்ற விவரம் தெரியுமா என்றால் ஸ்தலத்தில் உள்ளதை குறிப்பிட வேண்டும் . வழக்கின் சங்கதிகளை காட்டியுள்ளிர்கள் என்றாலும் ஸ்தலத்தில் உள்ளது போல் காடடவில்லை என்றாலும் சரியல்ல., ஸ்தலத்தில் உள்ள விவரம் பதிவு சய்துள்ளேன்.
4. 02.09.2021 ரோந்து போகும் போது என் பொருட்களை எடுத்து சென்றிர்கள என்றால் கத்தி அறுவாள், பெயிண்ட், தடி, உணவு பொருட்கள் உடை, துப்பாக்கி சில நேரத்தில் எடுத்து செல்வோம். இந்த தந்தம் தான் வழக்கில் சொல்லப்பட்ட தந்தம் என்று கூற முடியாத என்றால் சரியல்ல. சின்னத்தங்கம் என்பவரின் சொந்த அண்ணன் திருமன் என்ற விவரைம்தெரியுமா என்றால் சரிதான். ஒப்புதல் வாக்குமூலத்தில் நீங்களாகவே தயார் செய்து எதிரிகளிடம் மிரட்டி கையொப்பம் பெற்றிர்களா என்றால் சரியல்ல. சம்பவ நடந்த மாவடைப்பு மற்றும் குழிப்பட்டி இடத்தில் அரசு பள்ளிகள் இயங்கி வருகிறது அப்பர் ஆழியாறு பகுதியில் மின்சார துறை உள்ளது என்றால் துாரத்தில் உள்ளது. அவர்கள் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலத்திலும் பெற முன் வரவில்லை என்றால் சரியல்ல. யானை இறப்பு உங்கள் துறைக்கு அழுத்தம் தரும் என்பதால் வழக்கை முடிக்க வேணடும் என்று எதிரிகள் மீது வழக்கு போட்டுள்ளிர்கள் என்றால் சரியலல்ல. எதிரிகள் வானம் பார்த்த பூமி செய்பவர்கள் என்றால் சரிதான். உங்களுக் தெரியாத இடம் அவர்களுக்கு தெரியும் என்றால் சரிதான். இவ்வழக்கு சொத்தை மறைக்க வேண்டிய அவசியம் இல்லை என்றாலும், சம்பவ இடத்தில் பொய்யாக காண்பித்துள்ளிர்கள் என்றாலும் சரியல்ல.
5. இந்த யானை இறந்த கிடந்த இடமும் தந்தம் கிடைத்த இடமும் ராவணாபுரம் தேவனுார் பகுதியிலிருந்து இந்த மேற்கண்ட இடத்திற்கும் அடைய வழிகள் உள்ளது மற்றும் அருகாமையில் உள்ளது என்றால் வழிகள் உள்ளது அருகாமையில் இல்லை. 3 மற்றும் 4 எதிரிகள் ஆழியார் பகுதியில் கைது செய்த காரணத்திற்காக அங்கிருந்த பொது மக்கள் மறியல் செய்யப்பட்டது என்றால் அது குறித்து தெரியாது, கைது செய்த இடம் நல்லாறு.
மறுவிசாரணை இல்லை

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T. Nithyakala,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.